இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 05
இறுதிப் பரீட்சை – 2008
**LWU 3314/4334** – சுற்றாடல் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 07.04.2008 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. வழக்குகளுக்கு தீர்ப்பளிக்கும் போது நீதித்துறை எவ்வளவு தூரத்திற்கு சுற்றாடல் சட்ட எண்ணக்கருக்களிலும் கொள்கைகளிலும் தங்கியிருக்கின்றது என்பதனை விளக்குக. இலங்கையிலும் எனைய நியாயாதிக்கங்களிலும் தீர்க்கப்பட்ட வழக்குகளை குறிப்பிடுவதனூடு உமது விடையினை ஆதாரப்படுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

2. சிலிகன் லங்கா பிரைவட் லிமிடெட் இனால் சிங்கராஜ வனத்திற்கு அண்மையில் 60 மெகாவாட்ஸ் கொள்ளவுடைய மின்வலு ஆலை ஒன்றினை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டது. உரிய நிகழச்சித்திட்ட அனுமதியளிப்பு முகவருக்கு அடிப்படையான தகவல்கள் வழங்கப்பட்டவுடன் நிகழ்ச்சித்திட்ட அனுமதியளிப்பு முகவரினால் அம் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஓர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட நிகழ்ச்சிகத்திட்டத்திற்கு ஆரம்பக்கட்ட சுற்றாடல் பரீட்சிப்பு அறிக்கையானது போதுமானது என குழு தீர்மானித்தது. நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்பக்கட்ட சுற்றாடல் பரீட்சிப்பு அறிக்கையானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களையே உள்ளடக்கியிருந்தது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதியளிப்பதற்கு குழு தீர்மானித்தது.

   கிறீன் அக்ஷன் எனும் அரச சார்பற்ற நிறுவனம் மேற் கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை அனுமதிப்பதற்காக பின்பற்றிய நடபடிமுறை இயைபுடைய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவானதா என அறிவதற்கு விரும்புகின்றது. குறித்த அரச சார்பற்ற நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குக.

3. இலங்கையில் ஒலி மாசுறலினை கட்டுப்படுத்துவதற்கான சட்டப்பரப்பின் பயன்வலுத்தன்மையை இயைபுடைய சட்டங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி நுணுக்கமாக மதிப்பிடுக.

4. சினெஸ்டா நாட்டில் உள்ள கருப்பு நீர்வீழ்ச்சி என்பது மிகவும் அழகான நீர்வீழ்ச்சியாகும். இந் நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் உள்ள 10 ஏக்கர் நிலத்தினை சினெஸ்டா அரசு ஷகியா கம்பனிக்கு விற்பனை செய்யக் கருதியது. உல்லாசப்

பயணிகளைக் கவரும் வகையில் நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் காட்சியரைகளை உள்ளடக்கிய ஓர் உல்லாசப்பயணிகள் விடுதியினை அமைப்பதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. இந் நிகழ்ச்சித்திட்டமானது பல வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் எனவும் அதிக வெளிநாடு செலாவானியை உழைப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். சுற்றாடல் அமைச்சின் மூலங்களில் இருந்து கிடைத்த தகவல்களின்படி கருப்பு நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடப்பரப்பானது உலகின் மரபுரிமைவாய்ந்த இடங்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்படப் போகின்றது. சுற்றாடலியலாளர்களால் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அரசாங்கமும் ஷகியா கம்பனியும் குத்தகை ஒப்பந்தம் தொடர்பில் எவ்வித உத்தியோக பூர்வ தகவல்களையும் வெளியிடவில்லை.

குறித்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டால் தமக்கு கிடைக்கக்கூடிய சாத்தியமான சட்ட நடவடிக்கைகளை அறிவதற்கு சுற்றாடலியலாளரான பிரசாத் விரும்புகின்றான்.

சினெஸ்டாவின் சட்ட முறைமையானது இலங்கையின் சட்டமுறைமையினை ஒத்திருக்கின்றது எனக் கருதுக. அவருக்கு ஆலோசனை வழங்குக.

5. 40 பறவைகளையுடைய சிறிய பண்ணையுடன் பியால் 2005ம் ஆண்டு சிறு வியாபாரத்தினை ஆரம்பித்தான். பியால் மெதுவாக தமது வியாபாரத்தினை விருத்தி செய்ததுடன் தமது நிலத்துடன் ஒன்றாக அமைந்திருக்கும் அயல் நிலத்தினையையும் தமது வியாபாரத்தினை விருத்தி செய்யும் நோக்கில் கொள்வனவு செய்தான். 2008ம் ஆண்டு சனவரி இறுதிப்பகுதியில் பறவைகளின் எண்ணிக்கை 2000ஆக அதிகரித்தது. 2006ம் ஆண்டில் பிரதேச சபையிடம் இருந்து தமது பண்ணைக்கு பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை பியால் பெற்றான். 2006ம் ஆண்டில் 1000 பறவைகளே பியாலின் பண்ணையில் இருந்தன.

பியால் பண்ணை வைத்திருக்கும் பிரதேசத்தில் பத்து குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அவ்விடத்தில் வசிப்போரை பண்ணையில் இருந்து வெளிவந்த துர்நாற்றம் பாதித்தது. இதற்கு மேலதிகமாக பண்ணையில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகளினால் அப்பிரதேசத்தில் நீர் மாசு ஏற்பட்டது.

அப்பிரதேசத்தில் வதியும் மக்கள் பியாலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மற்றும் தமக்கு உரித்தான ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் உமது அலோசனையை வேண்டி நிற்கின்றனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

6. சூழல் தாக்க மதிப்பீட்டு திட்டமானது அதன் இலக்குகளை அடைவதற்கு தவறிவிட்டது என்ற நோக்கினை "சூழல் தாக்க மதிப்பீட்டினை" மீள்பரிசீலனை செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவானது கொண்டிருந்தது.

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

7. இயைபுடைய சர்வதேச கருவிகளின் பின்னணியில் உயிரியல் பல்வகைமையை பாதுகாப்பதற்கான இலங்கையின் சட்டப்பரப்பின் பயன்வலுத்தன்மையை நுணுக்கமாக மதிப்பிடுக.

8. சர்வதேச சுற்றாடல் சட்டத்தில் 'பொதுவான ஆனால் வேறுபடுத்தக் கூடிய கடப்பாடுகள்' எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை சமகாலப் பிரச்சினைகளில் இருந்து பெறப்பட்ட உதாரணங்களை குறிப்பிடுவதனூடு நுணுக்கமாக விளக்குக.

(பதிப்புரிமையுடையது)